# ஆடிப் பட்டம் காய்கறிகளுக்கான விலை முன்னறிவிப்பு

தமிழ்நாட்டில், ஆடிப்பட்டம் முக்கிய மானாவாரி சாகுபடி பருவமாகும். இக்காலகட்டத்தின் பயிர் உற்பத்தி தென்மேற்கு பருவ மழையை சார்ந்துள்ளது. பெரும்பாலும் தானியங்கள், எண்ணெய் வித்துக்கள் மற்றும் காய்கறிகள் ஆடிப்பட்டத்தில் சாகுபடி செய்யப்படுகின்றது. பருவமழையின் நிலை மற்றும் விளைப்பொருட்களுக்கான விலை ஆகியவற்றின் அடிப்படையில் விவசாயிகள் தங்கள் நடவு முடிவுகளை மேற்கொள்வதற்கு ஏதுவாக தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில், வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டுஆய்வு மையத்தில் இயங்கி வரும் தமிழ்நாடு பாசன விவசாய மேம்பாட்டுத் திட்டத்தின் விலை முன்னறிவிப்புத் திட்டமானது, தக்காளி, கத்திரி மற்றும் வெண்டை ஆகிய காய்கறிகளுக்கான விலை முன்னறிவிப்பை உருவாக்கியுள்ளது.

## தக்காளி

தேசிய தோட்டக்கலை வாரியத்தின் முதலாவது முன்கூட்டிய அறிக்கையின்படி, 2021-22 ஆம் ஆண்டு இந்தியாவில் தக்காளி 8.31 இலட்சம் எக்டர் பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்டு 203.00 இலட்சம் டன்கள் நம் நாட்டில் உற்பத்தியாகும் என்று அறிவித்துள்ளது. மத்திய பிரதேசம், கர்நாடகா, ஆந்திர பிரதேசம் மற்றும் தமிழ்நாடு ஆகியவை தக்காளி அதிகமாக உற்பத்தி செய்யும் மாநிலங்களாகும். இந்தியாவின் மொத்த தக்காளி உற்பத்தியில், தமிழ்நாடு 7சதவீதம் பங்களிக்கின்றது.

தமிழ்நாட்டில், கிருஷ்ணகிரி, தருமபுரி, சேலம், திருப்பூர், தேனி மற்றும் திண்டுக்கல் ஆகிய மாவட்டங்கள் தக்காளி உற்பத்தி செய்யும் முக்கிய மாவட்டங்களாகும். தமிழ்நாட்டில் அனைத்து பருவங்களிலும் தக்காளி சாகுபடி செய்யப்பட்டாலும் ஆடிப் பருவம் சாகுபடியை விவசாயிகள் அதிகளவு தேர்வு செய்கின்றனர். கோயம்புத்தூர் சந்தைகளுக்கு உடுமலைபேட்டை, ஆலந்துறை, பொள்ளாச்சி கிணத்துகிடவு, சேலம் மற்றும் செஞ்சிமலை ஆகிய பகுதிகளிலிருந்து தக்காளி வரத்தானது வருகிறது. கர்நாடகாவிலிருந்து

தக்காளி வரத்தானது ஜுலை2022 முதல் வரத்தொடங்கியுள்ளது. இவ்வரத்தானது ஆகஸ்ட் மாதம் 2022 இறுதி வரை வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**கத்திரி**

தேசிய தோட்டக்கலை வாரியத்தின் முதலாவது முன்கூட்டிய அறிக்கையின்படி, 2021-22 ஆம் ஆண்டு இந்தியாவில் கத்திரி 7.44 இலட்சம் எக்டர் பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்டு 127.68 இலட்சம் டன்கள் உற்பத்தியாகும் என்று அறிவித்துள்ளது. மேற்கு வங்காளம், ஒடிசா, பீகார், குஜராத் மற்றும் மத்திய பிரதேசம் ஆகிய மாநிலங்கள் கத்திரி உற்பத்தியில் முக்கிய பங்களிக்கின்றன. தமிழ்நாட்டில், தருமபுரி, கிருஷ்ணகிரி, திண்டுக்கல், திருவண்ணாமலை மற்றும் வேலூர் ஆகிய மாவட்டங்கள் கத்திரி பயிரிடுவதில் பெரும்பங்கு வகிக்கின்றன. வர்த்தக மூலங்களின்படி, கோயம்புத்தூர், சந்தைக்கு பொள்ளாச்சி, நாச்சிப்பாளையம், மற்றும் தொண்டாமுத்தூர் ஆகிய பகுதிகளிலிருந்து கத்திரி வருகிறது. பளபளப்பான அடர் ஊத நிற கத்திரி இரகங்கள் கோயம்புத்தூர் நுகர்வோரால் அதிகளவு விரும்பப்படுகிறது.

**வெண்டை**

தேசிய தோட்டக்கலை வாரியத்தின் முதலாவது முன்கூட்டிய அறிக்கையின்படி, 2021-22 ஆம் ஆண்டு இந்தியாவில் வெண்டை, 5.23 இலட்சம் எக்டர் நிலப்பரப்பில் பயிரிடப்பட்டு 64.16 இலட்சம் டன்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இந்தியாவில், குஜராத், மேற்கு வங்காளம், பீகார், மத்திய பிரதேசம் மற்றும் ஒடிசா ஆகிய மாநிலங்களில் வெண்டை உற்பத்தி பெருமளவில் செய்யப்படுகின்றது. தமிழ்நாட்டில், சேலம், தேனி, தருமபுரி, திருவள்ளூர், கோயம்புத்தூர் மற்றும் மதுரை ஆகிய மாவட்டங்கள் வெண்டை உற்பத்தியில் முன்னிலை வகிக்கின்றன. குறிப்பாக கோயம்புத்தூர் சந்தைக்கு, நாச்சிபாளையம், பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை மற்றும் ஒட்டன்சத்திரம் ஆகிய பகுதிகளிலிருந்து வெண்டை வரத்தானது அதிகளவு காணப்படுகிறது.

விலை முன்னறிவிப்புத் திட்டம், ஒட்டன்சத்திரம் சந்தையில் கடந்த 14 ஆண்டுகளாக நிலவிய தக்காளி, கத்திரி மற்றும் வெண்டை விலையை சந்தை ஆய்வுகள் மேற்கொண்டது. ஆய்வு முடிவுகளின் அடிப்படையில் அறுவடையின்போது தரமான தக்காளியின் பண்ணை விலை ரூ.20 முதல் ரூ.23, வரை, நல்ல தரமான கத்திரி கிலோவுக்கு ரூ. 25, முதல் ரூ.27, ஆகவும் மற்றும் தரமான வெண்டையின் பண்ணை விலை ரூ.15 முதல் ரூ.18, வரை இருக்கும் என்று அறியப்படுகிறது. எனவே, விவசாயிகள் மேற்கூறிய சந்தை ஆலோசனைகளின் அடிப்படையில் விதைப்பு முடிவுகளை எடுக்குமாறு பரிந்துரைக்கப்படுகின்றனர்.

**மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்**


*உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்*
*வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்*
*தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்*
*கோயம்புத்தூர்-641 003*
*தொலைபேசி- 0422-2431405*

*இயக்குனர் மற்றும் முனை அதிகாரி*
*தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டம்*
*நீர் நுட்ப மையம்*
*தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்*
*கோயம்புத்தூர்-641 003*
*தொலைபேசி -0422-6611278*


**தொழில்நுட்ப விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்**


*பேராசிரியர் மற்றும் தலைவர்*
*காய்கறிப் பயிர்கள் துறை*
*தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்*
*கோயம்புத்தூர் - 641 003.*
*தொலைபேசி எண் - 0422-6611374*

# Price Forecast for Aadi Pattam Vegetables

Adipattam is an important cropping season under rainfed system in Tamil Nadu. South West monsoon determines the production of the crops sown during this season. Mostly cereals, oil seeds and vegetables are sown in this season. Farmers take decisions on crop choice based on the status of the monsoon and the expected price for the commodity. The TN-IAM Project funded the Price Forecasting Scheme at Centre for Agricultural and Rural Development Studies, Tamil Nadu Agricultural University, Coimbatore has developed market advisory for Tomato, Brinjal and Bhendi, to help farmers in taking proper pre sowing decisions.

## Tomato

According to the First Advance Estimate of National Horticulture Board (2021-22), the area under tomato is 8.31 lakh hectares with a production of 203.00 lakh tones at country level. The major tomato growing states are Madhya Pradesh, Karnataka, Andhra Pradesh, Odisha West Bengal and Tamil Nadu. Tamil Nadu contributes 7 per cent share of the total tomato production in India.

In Tamil Nadu, the major tomato producing districts are Krishnagiri, Dharmapuri, Salem, Tiruppur, Theni and Dindugal. Tomato is being grown all over Tamil Nadu in all seasons and Aadi pattam is also the most preferable season for tomato cultivation. Fresh arrivals are coming to Coimbatore market from Udumalpet, Aalandurai, Pollachi, Kinathukadavu, Salem and Senjimalai. Also, arrivals from Karnataka have commenced from June 2022 and will continue till end of August 2022.

**Brinjal**

According to the First Advance Estimates of National Horticultural Board (2021-22) the area and production of brinjal in India are expected to be around 7.44 lakh hectares and 127.68 lakh tonnes respectively. West Bengal, Odisha, Gujarat, Bihar and Madhya Pradesh are major brinjal producing states of the country. Brinjal is grown in Dharmapuri, Krishnagiri, Dindigul, Tiruvannamalai and Vellore districts in Tamil Nadu. As per trade sources, current arrivals are coming from Pollachi, Nachipalayam and Thondamuthur. The dark purple varieties with glossy appearance, is mostly preferred by the consumers in the Coimbatore market.

**Bhendi**

According to the First Advance Estimate of National Horticulture Board, the area under bhendi is 5.23lakh hectares with production of 64.16 lakh tonnes during 2021- 22. Gujarat, West Bengal, Bihar, Madhya Pradesh and Odisha are major bhendi producing states of the country. The major bhendi cultivating districts in Tamil Nadu are Salem, Theni, Dharmapuri, Thiruvallur, Coimbatore and Madurai. As per the trade sources, most of the bhendi arrivals to Coimbatore market are coming from Nachipalayam, Pollachi, Udumalpet and Ottanchathiram.

The price forecasting team has analyzed the past 12 years prices for tomato, brinjal and bhendi that prevailed in Oddanchathiram and Coimbatore Uzhavar shandies. As per the results of the analysis, the farm gate price of good quality tomato during harvest (August to September'2022) would be around Rs.20-23 per kg. Farm gate prices of

good quality brinjal will rule around Rs. 25-27 per kg and bhendi will rule around Rs. 15-18 per kg respectively. Hence, farmers are advised to take up sowing decision accordingly

***For Marketing information details contact:***

*Domestic and Export Market Intelligence Cell*
*Centre for Agricultural and Rural Development Studies (CARDS)*
*Tamil Nadu Agricultural University*
*Coimbatore - 641 003.*
*Phone: 0422-2431405*

*The Director and TN-IAMP Nodal Officer*
*Water Technology Centre*
*Tamil Nadu Agricultural University*
*Coimbatore - 641 003.*
*Phone: 0422-6611278*

***For Technical Details please contact:***

*Professor and Head*
*Department of Vegetable crops*
*Tamil Nadu Agricultural University*
*Coimbatore-641003*
*Phone: 0422-6611374*